**அகுரணை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அகுரணை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதானகருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காணிமற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,237,773 ஆன பெறுமதி மூலதனமாக கணக்கிடப்பட்டிருக்காததுடன், ரூபா 176,430 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் ரூபா 320,000 ஆன கணனிமென்பொருள் தொகுதி மூலதனமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் நிலவிய நூலக புத்தக மீதினுள் ரூபா 47,594 ஆன அழிக்கப்பட வேண்டிய 685 புத்தகங்கள் உள்ளடங்கியிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,279,083 ஆன வேலைகடன்பட்டோர் மீதியொன்று பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 திகதியில் பெற வேண்டிய வேலை கடன்பட்டோர் கூட்டுத்தொகை ரூபா7,789,600 ஆனதுடன், அம் மீதியினுள் ஓராண்டு காலத்தையும் விஞ்சிய கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,490,115 ஆனது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதிதிகதியில் செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,963,431 ஆனதுடன், அம் மீதியினுள் ஓராண்டு காலத்தையும் விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,329,047 உம் 3 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,000 உம் ஆனது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு தொடர்ப்பு | இணங்காமை |
|---|---|---|
| | ------------------------------------------------------------- | --------------------- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்கபிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 vii (ஊ) | விளம்பர பலகைகளின் மூலம் ரூபா 188,000 ஆன வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2)(ஆ) | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 886,685 பெறுமதியான 85 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | |
| (இ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி (அங்கீகரிக்கப்பட்ட துணைச்சட்டம்) அதிகாரச்சட்டத்தை பயன்படுத்திக்கொள்ள வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 520/7 கொண்ட 1988 ஆகஸ்ட் 23 திகதிய வர்த்தமானியின் 4(ஆ) பிரிவின் 20(2) ஆம் பந்தி | தொடர்ப்புடைய சட்ட விதிகளுக்கு இணங்காது பிரதேச சபை அதிகாரஎல்லையில் 24 இறைச்சிக்கடைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிவிளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,921,846 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 13,037,958 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதிவிளைவுகளில் ரூபா 1,883,888 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் வளர்ச்சிக்கு ஏனைய அன்பளிப்பு விடயங்களில் ரூபா 6,174,050 ஆன அதிகரிப்புடன் செலவினம் அதிகரித்தல் தாக்கம் விளைவித்திருந்தது.

**2.3 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்**

2015 மற்றும் 2016 ஆண்டுகளில் மொத்த நடைமுறை சொத்துக்கள் மற்றும் மொத்த நடைமுறை பொறுப்புக்களிற்கு இடையில் விகிதம் முறையே 2.5:1 மற்றும் 2.1:1 ஆனது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** இறைச்சி விற்பனை செய்யும் வியாபார உரிமை சபைக்கு உரித்தாக இருக்கையில், பிரதேச சபை அதிகார எல்லையில் தனியார் இறைச்சிக்கடைகளுக்காக அனுமதிபத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ)** சபைக்கு சொந்தமான LL 6410 கொண்ட டிரம் ட்ரக் வண்டி மற்றும் பெகோ இயந்திரம் 2014 ஜுன் மாதத்தில் சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்ததுடன், இவ் வளங்களின் மூலம் வருமான வளர்ச்சிக்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4.2 வீதவரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,635,375 ஆன நிலுவை மீதி இருந்த போதிலும் வருடத்தினுள் ரூபா 728,122 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதுமொத்த நிலுவையின் 27 சதவீத அளவானது.

**2.4.3 அனுமதிபத்திரக் கட்டணம்**

அனுமதிபத்திரக் கட்டணம் தொடர்பாகவருடம் ஆரம்பத்தில் கணிப்பீடுசெய்துவருமானம் அறவிடுவதற்குநடவடிக்கைஎடுத்திருக்கவில்லை.

**2.4.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாணசபையின் பிரதானசெயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்துமீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்குநீதிமன்றதண்டப்பணமாகரூபா1,042,661 மற்றும் முத்திரைக் கட்டணமாகரூபா8,288,650 ஆனதொகைபெறவேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டுமீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை அலுவலகத்தில் 1000 சதுரஅடிகொண்டமுதலாம் மாடிவாடகைக்குகொடுக்கஅல்லதுவருமானம் ஈட்டுவதற்குநடவடிக்கைஎடுக்காதுநிர்மானிக்கப்பட்டதினத்திலிருந்துபயன்படுத்தப்படாமல் இருந்தது.

**3.2 முகாமைத்துவவினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** அகுரனநகரில் அமைந்துள்ள 35 கடையறைகளைக் கொண்டஅகுரனபொதுவியாபாரகட்டிடத் தொகுதி 30 ஆண்டுகளுக்குமுன் நிர்மானிக்கப்பட்டிருந்தபோதும்,நிர்மானிக்கப்பட்டதினத்தில் இருந்துபழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புசெய்யப்பட்டிருக்கவில்லை. இக் கட்டிடத்தில் 4 கடையறைகள் வாடகைக்குவழங்கப்பட்டிருக்காததுடன்,வாடகைக்குவழங்கப்பட்ட 10 கடையறைகள் மூடி வைக்கப்பட்டிருந்தன.

**ஆ)** அகுரனமினிமார்கட்டில் 09 கடையறைகளுக்குமிகக்குறைந்தமதிப்பீட்டுவாடகைஅறவிடப்பட்டிருந்தது. அவ்வாராயினும் இக் கடையறைகள்தொடர்பாகபௌதீககணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அறவிடப்படும் வாடகையைப் போன்று 90 சதவீதஅளவு கூடியபணத்திற்கு உப குத்தகைவழங்கப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டுவினைத்திறமையின்மை**

இறைச்சிவிற்பனைஉரிமையைகுத்தகைக்குவழங்கவேண்டியபோதிலும்,ரூபா 3,333 ஆனஉயர்பட்சமற்றும் ரூபா 1,670 ஆனகுறைந்தபட்சஅனுமதிபத்திரகட்டணம் அறவிடப்பட்டு சபை அதிகாரஎல்லைக்குள் 24 தனியார் இறைச்சிக் கடைகளைநடத்திச் செல்லசந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 பயனற்றஅல்லதுகுறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பிரதேசசபைக்குசொந்தமான 5 வண்டிகள் செயற்படும் நிலையில் காணப்படாததுடன்,அவற்றைபழுதுபார்ப்பதற்குஅல்லதுஏழத்தில்விற்பனைசெய்யநடவடிக்கைமேற்கொண்டிருக்கவில்லை

**3.5 சிக்கனமற்றகொடுக்கல் வாங்கல்கள்**

பிரதேசசபையினால் அரசநிறுவனமாககருதிவடமேல் அபிவிருத்திஅதிகாரிச்சபையிடமிருந்துபெறுகைநடைமுறையைபின்பற்றாதுரூபா 690,000 பெறுமதியானமென்பொருல் தொகுதியொன்றுகொள்வனவுசெய்யப்பட்டிருந்தது. இந் நிறுவனம் 20 சதவீத இலாபம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் தனியார் தரகர்

நிறுவனம்மொன்றுடன்ஒப்பந்தம்மூலம் இக்கருத்திட்டத்தைசெய்து இருந்தமையால் சபைக்குஉயர்ந்தபட்சஅனுகூலம் கிடைக்கும் வகையில் இக் கொள்வனவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 ஒப்பந்தக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2016ஆண்டில் உள்ளுராட்சிநிறுவனங்களின் உட்கட்டமைப்புவசதிகளைமேம்படுத்துவதற்கானநிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தலாகந்தபாதையைமேலும் முன்னேற்றுவதற்குரூபா 1,741,254 ஆனசெலவுமேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர்களைதெரிவுசெய்யபெறுகைகள் நடைமுறையினைபின்பற்றிஅதன் நிபந்தனைகளின் பிரகாரம் செய்யப்பட்டிருக்காததுடன்,பெறுகைகள் வழிகாட்டிகோவையின் அறிவுரைபிரகாரம் பெறுகைகள் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.13 பெறுனர்களுக்குபெறுகைவிண்ணப்பப் பத்திரம் அனுப்பப்பட்டிருந்ததுடன்,ஒருநபர் மாத்திரம் பெறுகைசமர்ப்பித்திருந்தார்.வேலைவிடயம் இலக்கம் 3 ஊடாகவடிகால் கான்கிரீட் செய்வதற்குகனமீற்றருக்குரூபா 13,435 வீதம் செலுத்திருந்தபோதும்,கீழ் பகுதியின் தடிப்பு 10 மி.மி. எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் 2017 மார்ச் 23 திகதிபௌதீகபரிசோதனையின் போது 5மி.மி. ஆனதனால் வடிகாலின் நீளம் 32 மீற்றருக்காகரூபா 15,041 ஆனபணம் கூடுதலாகசெலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ)** **2016** ஆண்டுபிரதேச சபை வழுவூட்டும் ஒதுக்கீட்டின் மீதானவேலைகளுக்காக 2016 பெப்ரவரி 21 திகதியமற்றும் 1/2016 இலக்கம் கொண்டபிரதேச சபை வழுவூட்டும் சுற்றறிக்கையின் 4:1 பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டவிலைகளுள் இலாபத்தைநீக்கிமதிப்பீடுதயாரிக்கப்பட்டிருகாததுடன் அச் சுற்றுநிறுபத்தின் 3 பிரிவிற்குமாற்றமாக சபை அலுவலகத்திற்குபூச்சுபூசுவதற்காகரூபா 108,675 ஆனசெலவுமேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.7 கழிவுப்பொருள் முகாமை

பிரதேச சபை அதிகாரஎல்லையில் ஒன்றுசேரும் முழு கழிவுப் பொருட்களும் ஒன்றுசேர்கப்படாததுடன் ஒருநாலைக்கு 5 டொன் அளவானகழிவுப் பொருட்கள் ஒன்றுசேர்கப்பட்டுயாலுகஹவெல இயற்கைபசலைகொட்டிலுக்குகொண்டுசெல்லப்பட்டுதுருப்பிடிக்காதசிறுஅளவானகழிவுபொருட்கள் கொட்டிலின் ஒருபகுதியில் தீயிடப்பட்டிருந்தது. யாலுகஹவெலகழிவுகொட்டில் மண்சரிவுக்குள்ளானதுடன் அங்குசாக்கடைநீர் கால்வாய் மூடப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்டோபர் 04 திகதிவரையும் அக் கொட்டில் முறையாகபழுதுபார்க்கப்படாததன் காரணமாக இயற்கைபசலைஉற்பத்திபிரச்சினைக்குஉள்ளாகியிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவினவிடயங்கள் இடையில்,ஒதுக்கீடுமாற்றப்பட்டதன் பின்னரும்பாதீடுமற்றும் உள்ளவாறானவருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையில்,போதியளவுவிலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடுஆக்கபூர்வமானமுகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாகபயன்படுத்தப்பட்டிருக்கவில்லைஎனஅவதானிக்கப்பட்டன.

(அ) 8 செலவினவிடயங்களில்மதிப்பிடப்பட்டசெலவைவிஞ்சி 1 சதவீதம் முதல் 57 சதவீதம் வரைசெலவுமேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இயற்கைபசலைகருத்திட்டத்தின் ஊடாகவருமானம் ஈற்றலைஅதிகரித்துக்கொள்ளகருதியபோதிலும்,இயற்கைபசலைவிற்பனைக்காக புது முதலீடாலர்களைதேடுவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்தபெறுகைகள் திட்டம்**

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கானபெறுகைகள்திட்டமொன்றுதயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------------

மீளாய்வாண்டில் சபையின் போதியளவுஉள்ளகக் கணக்காய்வொன்றுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாகசபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையானசொத்துக்கள்.

(ஆ) கணக்கீடு.

(இ) வாகனகட்டுப்பாடு.

(ஈ) வருமானகட்டுப்பாடு.

(உ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.

(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு.

(எ) கொள்வனவு